1981 ஏப்ரல் 29]

தமிழில் "டெலிபிரிண்டர்கள்".

*வினா எண். 931—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழக அரசு "தமிழ் டெலிபிரிண்டர்" அறிமுகம் செய்யும் செயற் குறிப்பு அரசு பரிசிலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: நடைபெற்ற ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டின்போது, 9-1-1981 அன்று, தமிழ் தொலை எழுதுபொறி (டெலிபிரிண்டர்) முதன்முறையாக அறிமுகப்படுத்தப்பட்டது.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவரவர்களே, இந்த தமிழ் டெலி பிரிண்டர் விலை என்ன? இதைக் கண்டுபிடித்தவர் ஊக்குவிக்கப்படுவாரா? மாவட்ட தலைமை இடங்களில், கலெக்டரேட்டுகளில் இந்த தமிழ் டெலி பிரிண்டர் வைக்கப்பட அரசு ஆவன செய்யுமா? இப்போது தமிழ் டெலி பிரிண்டர்கள் எங்கெங்கே இருக்கின்றன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, 5-வது உலகத் தமிழ் மாநாட்டின்போது தமிழ் டெலிபிரிண்டர்களை நாம் நம்முடைய பழக்கத்தில் கொண்டுவர வேண்டுமென்ற ஆசையின் விளைவாக இந்த முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டது. சென்னையில் இருக்கிற இந்துஸ்தான் டெலி பிரிண்டர்ஸ் நிறுவனம் இரண்டு தமிழ் டெலிபிரிண்டர்களைச் செய்து தந்திருக் கிறார்கள். ஒன்று மதுரையிலும், இன்னொன்று தலைமைச் செயலகத்திலும் வைக்கப்பட வேண்டுமென்ற யோசனை அரசுக்கு இருக்கிறது. அதனுடைய விலை என்ன என்று இன்னும் முழுமையாக நிர்ணயம் செய்யப்படவில்லை, அதுபற்றிய விவரம் தற்போது என்னிடம் இல்லை. ஆனால் ஒவ்வொரு மாவட்ட தலைமையிடத்திற்கும் இதைக் கொண்டுவர வேண்டும் என்றும், பத்திரிகை நிறுவனங்களில் இதைப் பயன்படுத்துவது பற்றி ஆராயவும் ஒரு கூட்டத்தை கல்வித் துறைச் செயலாளர் கூட்டியிருக்கிறார். அதிலே பத்திரிகைத் துறை சார்பான பிரதிநிதிகளும், இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் நிறுவனத்தின் சார்பாக சில பிரதிநிதிகளும், கல்வித் துறை சார்பாக சில பிரதி நிதிகளும் கலந்து பேசி, மேல் நடவடிக்கை பற்றி பேசினார்கள்.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவரவர்களே, நமது தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் வெளி மாநிலங்களுக்கும் வெளி நாடுகளுக்கும் போனால் தமிழ் செய்தியை விரைவாகத் தெரிந்துகொள்ள வாய்ப்பு இல்லை. 'கன்னைக்கட்டி

காட்டிலே விட்டதுபோல' இருக்கிறது. ஆகவே, வெளி மாநிலங்களிலும் வெளி நாடுகளிலும் இருக்கிற தமிழர்கள் தமிழ் டெலிபிரிண்டர்களை வைத்துக் கொள்ள முன்வந்தால் அரசு அதை அனுமதிக்குமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த டெலிபிரிண்டர் என்பது தமிழிலே செய்திகளை அனுப்புவதற்காக அமைக்கப்பட்ட ஒரு பொறியாகும். தமிழ்நாட்டுச் செய்திகளுக்காக என்று நாம் தயாரிக்கின்ற டெலிபிரிண்டர்கள் அல்ல. அதை, தமிழைப் பயன் படுத்துகின்ற, தமிழ் ஆட்சிமொழியாக இருக்கிற ஸ்ரீலங்கா, மலேசியா, சிங்கப்பூர், போன்ற பல்வேறு நாடுகளிலே கூடப் பயன்படுத்தலாம், அரசாங்கம் பயன்படுத்தலாம், பத்திரிகைத் துறையினர் பயன்படுத்தலாம். தனிப்பட்ட வர்கள்கூட அந்த டெலிபிரிண்டர்களை வைத்துக்கொள்ளலாம். அப்படி வைத்துக்கொண்டால், தமிழிலேயே தொடர்பு கொள்வதற்கு அது வசதியாக இருக்கும். அந்த நிலைமைகள் வருகிறபொழுது, தமிழுக்கு, தமிழனுடைய வளர்ச்சிக்கு அது உதவியாக இருக்கும். ஆகவேதான் இதிலே நாம் கொஞ்சம் ஆர்வம் கொண்டு செயல்படுகிறோம்.

திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, தமிழ் ஆட்சிமொழியாக வேண்டுமென்று வற்புறுத்தப்படும் இந்த நேரத்தில் அரசு அலுவலகங்களில் போதுமானதாக தமிழ் டைப்ரைட்டர்கள் இல்லையென்பதை அரசு அறியுமா? தமிழ் டைப்ரைட்டர்கள் இல்லாத காரணத்தால்தான், அமைச்சர்களின் சுற்றுப் பயண நிகழ்ச்சி நிரல்கள்கூட ஆங்கிலத்திலே அச்சடித்து அனுப்ப வேண்டிய ஒரு நிலை இருப்பதை உணர்ந்து, எல்லா அரசு அலுவலகங்களுக்கும் போதுமானதாக தமிழ் டைப்ரைட்டர்கள் வழங்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்வி தமிழ் டெலிபிரிண்டர் பற்றியது. தமிழ் டெலிபிரிண்டருக்கும் தமிழ் டைப்ரைட்டருக்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது. அதோடு, அரசு அலுவலகங்கள் அனைத்தும் கல்வி இலாகாவின் பொறுப்பில் இல்லை.

பிற்பட்ட பகுதிகளில் தொழில் கல்வி நிலையங்களை அமைக்கும் திட்டம்.

*வினா எண். 932—திரு. கே. சௌந்திரராசன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—